**24.11.2025.**

**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**SC No.20/2019**

**அ.சா.22**

**பெயர். திரு.மைக்கேல் இருதயராஜ்**

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதன்மை சாட்சி தொடர்ச்சி**

இதற்கு முன்பாக கடந்த 02/08/2018 ந் தேதி காலை 10 மணியளவில் டி. எடைப்பாளையம் இறந்தவரின்கொல்லை வீட்டிற்கு பின்புறம் உள்ள கரும்பு தோப்பில் சாட்சிகள் தனபால் த/பெ பிச்சைக்காரன், சங்கர் த/பெ பொன்னன், ஆகியோர்கள் முன்னிலையில் இறந்தவரின் வெளிர்பச்சை நிறமுள்ள இரத்தக்கறை படிந்த அரக்கை ஜாக்கெட் ஒன்றை ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி ஆவணங்களின் அடிப்படையில் அந்த ஜாக்கெட்டை பார்த்தால் அடையாளம் கூற முடியும் என்று தெரிவித்தார். சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். அந்த ஜாக்கெட் சா.பொ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட ரவி மற்றும் செல்வம் ஆகியோர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மகசரில் கைப்பற்றப்பட்ட அனைத்தையும் சாட்சிகள். தமிழரசன் மற்றும் தனபால் ஆகியோர்களை விசாரணை செய்தும், தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட ரவி மற்றும் செல்வம் ஆகியோரை வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகளை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்ததாகவும், பின்பு எதிரிகளை உச்ச நீதிமன்ற கட்டளை பின்பற்றி முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட திலீப் குமார் என்பவரை பெங்களூர் கே. ஆர். புரம் காவல் நிலைய வழக்கில் கைது செய்யப்பட்டு பெங்களூர் பரப்பனஹள்ளி அக்ரஹார சிறையில் இருந்தவரை பி.டி வாரண்ட் மூலம் 29/08/2018-ம் தேதி 14.00 மணிக்கு சம்பிரதாய கைது செய்தும், பின்பு 30/08/2018-ம் தேதி உளுந்தூர்பேட்டை நீதித்துறை நடுவர் எண் - 2 என்பவரிடம் எதிரி திலிப் குமாரை ஆஜர் படுத்தி, பின்பு போலீஸ்காவலுக்கு எடுத்து, சாட்சிகள் 1.தமிழரசன்

த/பெ.செல்வராஜ், கிராம நிர்வாக அலுவலர், சி. மெய்யூர் (பொறுப்பு), சித்தலிங்க மடம், 2.தனபால் த/பெ.பிச்சைக்காரன், கிராம உதவியாளர், சித்தலிங்க மடம் ஆகியோர்களின் முன்னிலையில் விசாரிக்க, அவர் எந்த வித தூண்டுதலும் வற்புறுத்தலும் இன்றி, தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார். அதை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தும், சாட்சிகள், எதிரியிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் இறந்தவருக்கும், எதிரிகள் மோகன், ரவி ஆகியோருக்கிடையில் இருந்த முன்விரோதம் மற்றும் தான் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட விவரத்தையும் சொல்லியுள்ளார். மேலும் இந்த வழக்கில் தன்னுடன் முஸ்தபா த/பெ.அப்துல் காதர், டி எடைப்பாளையம் அவரும் தங்களுடன் இந்த வழக்கில் ஈடுபட்ட விவரத்தையும் சொல்லியுள்ளார். மேலும் தன்னை அழைத்து சென்றால் கொலை செய்த இடத்தையும், கொலைக்கு பயன்படுத்திய கத்தியையும் எடுத்து ஆஜர் செய்வதாக, கூறியுள்ளார். மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில், 31/08/2018 ம் தேதி காலை 8 மணிக்கு, இறந்த அப்துல் ஜப்பார் நிலத்தில் பின்புறம் உள்ள வரப்பு ஓரமுள்ள தென்னை மரத்தின் கீழ் உள்ள புதரில் இருந்து ரத்தக்கறை படிந்த மரக்கை பிடியுடன் கூடிய ஒரு கறி வெட்டும் கத்தியை, மகசரில் கைப்பற்றியுள்ளார். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 9 ஆகவும் கறி வெட்டும் கத்தி சா.பொ. 7 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரியை ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையம் அழைத்துச் சென்று, உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி, முறையாக மீண்டும் போலீஸ் காவலுக்கு எடுத்தவரை நீதிமன்ற உத்தரவுகளை பின்பற்றி, மீண்டும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். வழக்கின் சொத்தினை ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி பகுப்பாய்வு அறிக்கை பெற, கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் - 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

**(நேரமின்மை காரணமாகவும், மேற்கொண்டு ஆவணங்களை சமர்ப்பித்து, குறியீடு செய்வதற்காகவும் ஒத்திவைக்கப்படுகிறது).**